# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## தேதி: 09.03.2026
## DVC.No.09/2021
## வழக்கு சாட்சி RW.1 – விஜய் , த/பெ. முத்துச்சாமி

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது தகப்பனார் முத்துச்சாமிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான் . எனது தந்தையின் முதல் மனைவி பெயர் பாப்பாத்தி. பாப்பாத்திக்கும் , முத்துச்சாமிக்கும் இரண்டு பிள்ளைகள் உள்ளனர் , அவர்கள் பெயர் கண்ணன் , செல்வி. இரண்டாவது மனைவியின் பெயர் ராஜம்மாள் . ராஜம்மாள், முத்துச்சாமிக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர் , நான் (விஜய்) மற்றும் பிரபு . நான் M.C.A படித்துள்ளேன். எனது சகோதரி செல்விக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர் , அவர்களது பெயர்கள் சந்தியா , சௌமியா. சந்தியா B.E படித்துள்ளார். சௌம்பியா B.Sc படித்துள்ளார். சந்தியா , சௌம்பியா ஆகிய இருவரையும் நான்தான் படிக்க வைத்தேன் என்றால் சரியல்ல , எனது அக்காதான் படிக்க வைத்தார் . எனது அக்கா செல்வியின் கணவர் பெயர் ராமசாமி . ராமசாமி இறந்துவிட்டார், அவர் இறந்து 23 வருடங்கள் ஆகிவிட்டது . எனது அக்கா செல்வி விவசாயம்தான் செய்து வந்தார் , தற்போது அவர் விவசாயம் செய்யவில்லை. எனது அக்கா செல்வி கடந்த 17 ஆண்டுகளாக விவசாயம் செய்யவில்லை . செல்விக்கு விவசாயம் தவிர்த்து வேறு வருமானம் எதுவும் இல்லை.

சந்தியா, சௌம்பியாவிற்கு வயது 31க்குள் இருக்கும் . சௌம்பியாவை, எனது அக்கா எனக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார் என்றால் சரியல்ல. நான் கவுண்டர்

இனத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான் . மனுதாரர் பஞ்சவர்ணம் மன்னாடியார் இனத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான் . மனுதாரர் வேறு இனத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் , எனது சகோதரி அவரது மகளை எனக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்ட காரணத்தாலும் எனது குடும்பத்தார்கள் , மனுதாரரை கொடுமை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல . நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். எனது வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் பட்டயக்கணக்கரின் பெயர் ராஜதுரை. கடந்த 4 வருடங்களாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேன். அதற்கு முன்பு நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் , 2014–2015 ல் வருமான வரி கணக்கு தாக்கல் செய்தேனா என்று எனக்கு நினைவில்லை. எனக்கு 2021 காலகட்டத்திற்கு பிறகுதான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்தது நினைவுள்ளது . 2015 ல் இருந்து 2021 வரை வருமான வரி கணக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு இரண்டு வங்கி கணக்குகள் உள்ளது , ஒன்று சங்ககிரியில் உள்ள ICICI வங்கி கிளையில் கணக்கும் மற்றும் சங்ககிரி AXIS வங்கியிலும் கணக்கு உள்ளது . ICICI வங்கி கணக்கு எண் நினைவில்லை . AXIS வங்கி எண் எனக்கு நினைவில்லை. ICICI வங்கி கணக்கு 2021–2022 காலகட்டத்தில் வங்கி கணக்கு ஏற்படுத்தப்பட்டது . AXIS வங்கி கணக்கு 2017–2018 காலகட்டத்தில் வங்கி கணக்கு ஏற்படுத்தப்பட்டது . மேற்சொன்ன அந்த இரண்டு வங்கி கணக்கின் கணக்கு புத்தகத்தை உரிய பதிவுகளுடன் இந்த வழக்கு சம்பந்தமாக தயாராக உள்ளேனா என்றால் வங்கி கணக்கு புத்தகத்திற்கு பதிலாக பரிவர்த்தனை விபரங்களை (Statement) தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு 04.12.2016 ம் தேதி மனுதாரருடன் திருமணம் ஏற்பட்டது . மனுதாரரின் பெற்றோர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது கைப்பேசி

எண்.9965017502 ஆகும். நான் ஒரு கைப்பேசி எண்தான் வைத்துள்ளேன். மேற்சொன்ன எண்ணிற்கு Facebook, Wattsapp தொடர்புடைய பதிவு உள்ளது என்றால் சரிதான்.

மேற்சொன்ன தொலைபேசி எண் மூலமாக மனுதாரரருக்கும், அவரது சகோதரரருக்கும் ஆபாச குறுந்தகவல்கள் நான் அனுப்பி வருகிறேன் என்றால் சரியல்ல . எனக்கு சொந்தமாக ஒரு கார் உள்ளது. அந்த வாகனமானது Swift Desire ஆகும், அதன் பதிவு எண் .TN 52 AA 7097 ஆகும். என்னிடம் இருசக்கர வாகனம் எதுவும் இல்லை . எனக்கு இருசக்கர வாகனங்கள் உள்ளது என்றாலும் , அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது வருமான வரி கணக்கு விபரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது பட்டயக் கணக்கரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன் . எனது பட்டயக் கணக்கரின் கைப்பேசி எண் .9600597626 ஆகும். அவரது அலுவலகம் ஈரோட்டில் உள்ளது, ஆனால் முழு அஞ்சல் விலாசம் தெரியாது. எங்களுக்கு சொந்தமான தோட்டம் சங்ககிரியில் உள்ளது என்றால் சரிதான் . மொத்தம் சுமார் ஒன்றரை ஏக்கர் என்று கேள்விப் பட்டுள்ளேன் . எங்களுக்கு சின்னா கவுண்டனூரில் தோட்டம் உள்ளது என்றால் மேற்சொன்ன தோட்டம்தான் அந்த தோட்டம் ஆகும். அதில் நாங்கள் தென்னை பயிரிட்டுள்ளோம். எப்போது தேங்காய் வெட்டுவார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது . 40 நாட்களுக்கு ஒரு முறை மேற்சொன்ன தோட்டத்தில் தென்னங்காய் வெட்டுவார்கள் என்றாலும், அதன் மூலம் மாதம் ரூ .25,000/- வருமானம் வருகிறது என்றால் சரியல்ல.

மேற்சொன்ன தென்னை விவசாயம் மூலம் வருடத்திற்கு ரூ.70,000/- ஈட்டப்படுகிறது. வருடத்திற்கு அந்த தென்னை விவசாயம் மூலம் 3-4 இலட்சம் ஈட்டப்படுகிறது என்றாலும்,

அதை மறைத்து ரூ .70,000/– தான் ஈட்டப்படுவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 24.03.2021ம் தேதியன்று குழந்தை இனன்யாவை மனுதாரர் வசம் இருந்து வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றதாக திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனுவின்பேரில் கொடைக்கானல் காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான் . 2021ல் இனன்யாவிற்கு வயது சுமார் 4 ஆகும். இந்த வழக்கின் மனுதாரரான பஞ்சவர்ணத்தை என்னுடன் சேர்ந்து வாழச் சொல்லி சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், அதன் வழக்கின் பதிவு எண் . HMOP.No. 54/2021 என்றால் எண் விபரம் எனக்கு தெளிவாக நினைவில்லை. அந்த வழக்கில் பஞ்சவர்ணம் தோன்றா தரப்பினர் ஆனதால் என் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது . அந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட வருடம் எனக்கு நினைவில்லை. அந்த வழக்கின் தீர்ப்பில் பஞ்சவர்ணத்தை என்னுடன் சேர்ந்து வாழச் சொல்லி உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான் . அந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தேனா என்றால் அந்த வழக்கிற்கு பிறகு பஞ்சவர்ணம் GWOP மற்றும் இந்த DVC வழக்கு தாக்கல் செய்ததால் மேற்சொன்ன HMOP தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை. என் மீதும் , என் குடும்பத்தார் மீதும் வழக்கு பதியப்படும் என பயந்து நான் HMOP வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

திருமணமான புதிதில் மனுதாரர் பயன்படுத்தி வந்த கைப்பேசி அழைப்புகளை மனுதாரருக்குத் தெரியாமல் பதிவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல . மனுதாரரை எங்கள் வீட்டில் வேலையாள் மற்றும் அடிமைப்போலவும் நடத்தி வந்தோம் என்றாலும் அவருக்கு உரிய மரியாதையும் , மனைவி என்ற அந்தஸ்தையும் அவருக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல . நான் இனன்யாவை கடத்திச் சென்றதாகச் சொல்லி மனுதாரர்

சென்னை உயர்நீதிமன்றம் , மதுரைக் கிளையில் HCP.(MD). No. 804/2021 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் . அந்த வழக்கின் உரிமையியல் நீதிமன்றத்தைத் நாடி முறையாக உத்தரவு பெற்றுக்கொள்ளுமாறு சொல்லப்பட்டது என்றால் சரிதான். GWOP 129/2021 என்ற வழக்கு மனுதாரர் பஞ்சவர்ணம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான் . அந்த மனுவின் ( GWOP) பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் இனன்யாவை மனுதாரர் நான் வசிக்கும் இடத்தில் வந்து பார்த்துக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான் . உத்தரவின்படி நான் நடந்துகொள்ளவில்லை என்றாலும் , இனன்யாவை மனுதாரருக்கு காட்டாமல் மறைத்து வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன GWOP மனு மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CMA மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் . அந்த CMA வழக்கானது நிலுவையில்தான் உள்ளது என்றால் சரிதான் , அதில் எனது வழக்கறிஞர் மூலம் தோன்றியுள்ளேன் என்றால் சரிதான் . குழந்தையை நான் கடத்தி சென்றுவிட்டதால்தான் மனுதாரர் சட்டப்போராட்டம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

மனுதாரர் அவர் பெற்றோரை இழந்து கூலி வேலைக்கு போய்வருகிறார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. இந்த வழக்கின் மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்ச வழங்கச்சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து என்றால் சரிதான். மாதம் ரூ .3,000/- கொடுக்கச்சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான் . அந்த உத்தரவுப்படி நான் மாதம், மாதம் பணம் செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை , பாதிதான் கொடுத்துள்ளேன் . மொத்தமாக எவ்வளவு கொடுத்துள்ளேன் என்றுத் தெரியவில்லை. மனுதாரரின் கணவர் என்ற அடிப்படையில் மனுதாரரக்கு நான் உணவு , உடை, தங்குமிடம் , மருத்துவச் செலவு ஆகிய தொடர்புடைய பராமரிப்புச் செலவு கொடுக்க நான் கடைமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வேறு ஜாதியைச் சேர்ந்தவர் என்பதாலும்,

எனது அக்கா செல்வியின் மகள் சௌமியாவை திருமணம் செய்யும் நோக்கத்தில் மனுதாரரை அடித்து வீட்டை விட்டு விரட்டிவிட்டோம் என்றால் சரியல்ல. எனக்கு போதிய வருமானம் இருந்தும் மனுதாரருக்கு பராமரிப்பு தொகை செலுத்த மறுக்கிறேன் என்றால் எனக்கு போதிய வருமானம் இல்லை . மனுதாரரை உடல் ரீதியாகவும் , மன ரீதியாகவும் பழிவாங்கும் நோக்கில் நீதிமன்றம் உத்தரவிட்டும் ஜீவனாம்ச தொகை வழங்காமல் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.09 18:58:12 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.